மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானாமதுரை ஒன்றியத்தில் வைகை ஆற்றின் நீரை ஆதாரமாகக் கொண்டு வலசை வடம்பாக்கி, குருந்தங்குளம், செங்களத்தூர் மற்றும் 13 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டது. நீர் உறிஞ்சி கிணறு அமைக்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் மிக விரைவாக நிறைவேற்றப்பட்டு வருகிறது. விரைவில் பயனுக்குக் கொண்டு வரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வ. மு. சுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். அதுபோன்று பல நூற்றுக்கணக்கான கிராமங்களில். ஏறக்குறைய எல்லா கிராமங்களிலும் உப்பு தண்ணீராக இருப்பதால் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை பல திட்டங்களாக மாற்றி. பரவலாக ஆக்கி பல இடங்களுக்கு இத்திட்டம் பயன்படும் வகையில் அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பல்வேறு இடங்களுக்கு இதுபோன்ற பிரச்சினைகள் இருக்கின்ற காரணத்தினால் குடிநீர் வடிகால் துறையின் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு இதில் எந்தெந்த வகையில் நீர் ஆதாரத்தை மக்கள் பெற முடியும் என்பதை ஆய்வு செய்து அந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 527, டாக்டர் ஜெய்சன் ஜேக்கப், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் .

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

527—

## பாலாறு—ஆரணி குடிநீர்த் திட்டம்.

*4036—டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் :

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) ஆரணி நகரின் குடிநீர் பிரச்சினைக்கு நிரதர தீர்வுந் ஏற்பட பாலாறு-ஆரணி குடிநீர்த் திட்டத்தை செயல்படுத்த அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : ஆரணி நகராட்சிக்கு பாலாற்றை நீராதாரமாகக்கொண்டு' குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்தை செயல்படுத்த, ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆய்வுப் பணிகள் 6/92-ல் முடிக்கப்பட்டு, திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரசின் நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டவுடன் திட்டம் செயலாக்கப்படும்.

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்தல் முடிந்து மக்களைச் சந்திக்கச் சென்றபோது மக்கள் பெரும் குறையாக சொன்னது குடிதண்ணீர் பிரச்சினையைத் தான். நானும் எங்களுடைய இதய தெய்வம் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆவன செய்வார்கள் என்று சொன்னேன். ஆனால் ஓரிரு நாட்களிலே மழை கொட்டோ கொட்டென்று கொட்டி மக்கள் '' புண்ணியவதி புவி ஆள ஆரம்பித்ததும் பூமாதேவியின் தாகம் தீர்ந்தது'' (மேசையைத் தட்டும் ஒலி) என்று பேசுகின்ற அளவுக்கு மழை பெய்து ஏரி, குளங்கள், கிணறுகள் எல்லாம் நிரம்பியது. கோடை வந்த அந்த நேரத்திலே என் தலையும் தப்பியது. ஆனால் மீண்டும் கோடை வருகிறது. மீண்டும் அங்குள்ள பொதுமக்களிடையே தண்ணீர் பிரச்சினை வர இருக்கிறது. ஆகவே, ஆரணி நகரைப் பொறுத்தவரையிலும், ஆரணிப்பாளையம் பகுதியிலே முந்தைய ஆட்சியிலே 6 மாத காலத்திற்கு ஒரு முறை கூட தண்ணீர் வராத நிலை இருந்தது. ஆனால் நம்முடைய ஆட்சி வந்தவுடன் வண்டிகள் மூலமாக தண்ணீரை அளித்து அவர்களுடைய பிரச்சினையை அரசு கனிவோடு பரிசீலிக்கிறது. ஆனால் இந்தப் பிரச்சினையை தீர்ப்பதற்கு, அந்தப் பகுதிகளில் குடிநீர் திட்டங்கள் நிறைவேற நீண்ட நாட்கள் ஆகும். எனவே, அந்தப் பகுதியிலே ஆழ்குழாய் கிணறுகள் அமைத்து இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காண அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆய்வுப் பணிகள் தற்போது நடக்கின்ற நிலையில், தேவையான அளவுக்கு நீர் ஆதாரங்கள் கிடைக்காத காரணத்தினால் மிக அதிகமான பகுதிகளில் ஆய்வுப் பணிகள் செய்ய வேண்டியிருப்பதால் ஆய்வுப் பணிகள் 1992—ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களுக்குள் முடிக்கப்பட்டு அரசு நிர்வாக ஒப்புதலுக்குப் பிறகு இந்தப் பணிகள் தொடங்கப்படும். தற்போது நிலைமைகளை சமாளிப்பதற்கு மாண்புமிகு உறுப்பினர் கூறியபடி பல்வேறு நிலைகளை ஆராய்ந்து ஆழ்குழாய் கிணறுகள் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 528, திரு. கே. பி. மணிவாசகம், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.